ජාතික ප්‍රතිපත්ති හා ආර්ථික කටයුතු අමාත්‍යාංශය
தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சு
**MINISTRY OF NATIONAL POLICIES AND ECONOMIC AFFAIRS**

"මිලෝදා" (පැරණි ටයිම්ස් ගොඩනැගිල්ල), පළමු මහළ, බ්‍රිස්ටල් වීදිය, කොළඹ 01. / 'மிலோதா', 1ஆம் மாடி,பிரிஸ்டல் வீதி,கொழும்பு 01./ "Miloda"(Old Times Building), 1st Floor, Bristol Street, Colombo 01

මගේ අංකය / எனது இல / My No: MNPEA/PLN/RIDP/2016 | ඔබේ අංකය / உமது இல / Your No: | දිනය / திகதி / Date: 25.04.2016

சுற்றுநிருப இலக்கம் 02/2016 (i)

சகல மாவட்டச் செயலாளர்களுக்கும்

<u>கிராமிய உட்கட்டுமான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (RIDP) 2016</u>

மேற்படி விடயம் தொடர்பான 2016 பங்குனி 24 திகதியிடப்பட்ட எனது சுற்றுநிருப இலக்கம் 02/2016 (i) தொடர்பாக தங்களது அவதானத்திற்கு.

மேற்குறித்த சுற்றுநிருபத்தில் பின்வரும் பந்திகளை இணைத்துக்கொள்ளுமாறு தயவாக வேண்டப்படுகின்றீர்கள்:

<u>பந்தி இல 2</u>
"இத்திட்டத்தினை அமுல்படுத்தும் பொருட்டு, பிரிவினுடைய கிராம சேவகருக்கு மேலதிகமாக, கிராம மட்டத்தில் சேவையாற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்களாகிய பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர், விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர் ஆகியோரது உதவிகளைப் பெற்றுக்கொள்ளமுடியும்"

<u>பந்தி இல 3</u>
3.6 – சுயதொழில் முயற்சியாளர்களுக்கு அவர்களது கைத்தொழிலை / வர்த்தகத்தை விருத்தி செய்வதற்காக 30% வரையில் மட்டும் மொத்த ஒதுக்கீட்டை ஒதுக்கீடு செய்ய முடியும். உபகரணங்கள்/உற்பத்திக்கான மூலப்பொருட்களுக்கான பெறுமதி ரூபா 25,000.00 ற்கு குறையாமலும் ரூபா 50,000.00 ற்கு மேற்படாமலும் ஒரு முதலீட்டாளருக்கு ஒரு கொடையாக வழங்கமுடியும். பயனாளிகளைத் தெரிவு செய்யும்போது, கருத்திட்டங்களை இனங்காண்பதற்காக உருவாக்கப்பட்ட கிராம சேவையாளர் பிரிவின் கிராம மட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் கலந்தாலோசனையுடன் பிரதேச செயலாளர் பயனாளிகளைத் தெரிவு செய்து பிரதேச செயலக மட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் அனுமதியினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். மேலும், பயனாளிகள் விநியோகிக்கப்பட்ட உபகரணங்கள் உற்பத்திக்கான மூலப்பொருட்களை சரியான முறையில் பயன்படுத்துகின்றார்களா என பிரதேச செயலாளரினால் ஒரு முறையான கண்காணிப்பு செயன்முறையினை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

பயனாளிகளைத் தெரிவு செய்யும்போது பின்வரும் நிபந்தனைகளைப் பின்பற்றப்படுதல் வேண்டும்.

- தொழிலாளர்களுக்கான வேலை வாய்ப்புக்கள் பயனாளியின் கீழ் உருவாக்கப்படல் வேண்டும்.
- பெறுமதி சேர்க்கப்படல் வேண்டும்
- உற்பத்திக்கு / சேவைகளிற்கு உள்நாட்டுச் சந்தைகளில் கேள்வி இருத்தல் வேண்டும்
- இனங்காணப்பட்ட கைத்தொழிலில் / வர்த்தகத்தில் பயனாளி ஏற்கனவே ஈடுபட்டிருப்பின் அதுதொடர்பாக ஏற்கனவே அவன்/அவள் போதுமான பயிற்சியைப் பெற்றிருப்பின்
- குறித்த கைத்தொழில் / வர்த்தகத்தின் விரிவாக்கத்திற்கான சாத்தியக்கூறுகள்.

දුරකථන / தொலைபேசி / Telephone: + 94 – 11- 2322867
ෆැක්ස් / தோலைநகல / Fax: + 94 – 11- 2339732, + 94 – 11- 2473643
විද්‍යුත් තැපැල / மின்னஞ்சல / E-mail: info@mnpea.gov.lk
Website: www.mnpea.gov.lk

பந்தி இல 7

"பிரதேச செயலக மட்ட ஒருங்கிணைப்புக் குழு மட்டத்தில் கிராமிய உட்கட்டுமான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கருத்திட்டங்களை தெரிவு செய்யும் போது ஏதும் பிரச்சனைகள் தோன்றும் பட்சத்தில், உடன்பாட்டினை அடையும் பொருட்டு அவை மாவட்ட மட்ட ஒருங்கிணைப்புக் குழுவிற்கு தொரியப்படுத்தப்படல் வேண்டும்."

**எம்.ஐ.எம். றபீக்**
செயலாளர்

பிரதிகள்:

1. பிரதம மந்திரிக்கான செயலாளர் – தகவலுக்காக
2. செயலாளர், நிதி அமைச்சு – தகவலுக்காக
3. உள்நாட்டலுவல்கள் அமைச்சு – தகவலுக்காக
4. செயலாளர், விஷேட செயற்பாடுகளுக்கான அமைச்சு – தகவலுக்காக
5. சகல மாகாணங்களினதும் பிரதம செயலாளர்கள் – தகவலுக்காக
6. கணக்காய்வாளர் நாயகம் – தகவலுக்காக
7. பணிப்பாளர் நாயகம், தேசிய திட்டமிடல் திணைக்களம் – ததகவலுக்காக
8. பணிப்பாளர் நாயகம், தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம் – தகவலுக்காக
9. பணிப்பாளர் நாயகம், கருத்திட்ட முகாமை மற்றும் கண்காணிப்புத் திணைக்களம் – தகவலுக்காக
10. சகல மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர்கள் - தகவலுக்காக மற்றும் உரிய அலுவலை மற்கொள்வதற்காக